[26th July 1957

SRI M. KALYANASUNDARAM : நான் பேசுவதற்கு விரும்பி இருக்க மாட்டேன். கனம் மந்திரி அவர்கள் பேசியதில் ஒரு விஷயம் என்னுடைய மனதைப் புண்படுத்தியது அதற்கு பதில் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அவருக்கு சரியான முறையில் பதில் சொல்ல முடியவில்லை என்பதற்காக . . .

MR. SPEAKER : Are you rising on a point of order or on personal explanation.

SRI M. KALYANASUNDARAM : I am speaking on the clause, Sir.

MR. SPEAKER : There is no amendment to the clause.

SRI M. KALYANASUNDARAM : Excuse me, Sir. I have no intention to differ from you. But when the motion is before the House, I am entitled to speak on it.

THE HON. SRI C. SUBRAMANIAM : I also would like to point out that in speaking on clause 2, the hon. Member can refer to the sum of Rs. 22,000 being the extra expenditure which occurred in that year and the reason for that. He cannot speak about pendency or the general state of affairs now in the High Court.

* SRI M. KALYANASUNDARAM : இருபத்தியிரண்டாயிரம் ரூபாயை செலவு செய்தது அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லும் போது வரம்புக்கு மீறி பேசப்பட்டது என்று சொல்வது சரியல்ல. அவர் சொன்னதற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் பதில் சொல்ல விரும்புகிறேன். அவருக்கு பதில் சொல்வதற்கு சரியான காரணம் இல்லை அதனால்தான் ரஷ்யாவையும் பிரிட்டனையும் அழைக்கிறார். அப்படி அழைக்க வேண்டியதில்லை. ரஷ்யாவாக இருந்தாலும் சரி, பிரிட்டனாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி அவர்கள் வந்து போகட்டும். ஆனால் அவர்களுக்கு உடன்பட்டு அவர்கள் சவாரி பண்ணுவதை அவர் ஒப்புக்கொண்டாலும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

The schedule was put and carried.

Clause 1 and the preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 2) Bill, 1957, be passed."

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation (No. 2) Bill, be passed."

SRI K. ANBAZHAGAN : கனம் தலைவர் அவர்களே, இப்படிச் சில அதிகத் தொகைகள் செலவழிக்கப்பட்ட முறையிலேயும், செலவழிக்கப்பட வேண்டி தேவைப்படும் முறையிலேயும் கொண்டு வரப்படுகிற சில மசோதாக்கள் மீது கருத்துக்களை தெரிவிக்கிறபோது ஏற்கனவேயுள்ள (ஆடிட் ரிப்போர்ட்) கணக்குத் தணிக்கை விவரத்தைப்பற்றி பல உறுப்பினர்கள் பேச நேரிடுகிறது. அந்தக் கணக்குத் தணிக்கை விவரம் அரசாங்கத்தாராலேயே தங்களுடைய ஒரு கூற்றினாலேயே தயாரிக்கப்பட்டு இங்கேயுள்ள சட்ட சபை